பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

30 06 2025 **MONDAY** 6 30 **PM**

<u>வணக்கம்-மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தொழில் வளர்ச்சியில் எஃகு துறை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கப்பல் போக்குவரத்துத்துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

4. திமுக கூட்டணி கட்சிகள் இடையே எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை என்று மாநில அமைச்சர் திரு கே என் நேரு கூறியுள்ளார்.

5. ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee – Taneesha Kotecha** இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>>>><<<<<<<<<<

தொழில் வளர்ச்சியில் எஃகு துறை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக, கனரக தொழில்துறை அமைச்சர் திரு குமாரசாமி எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

எஃகு துறையின் வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்தியதன்மூலம், இந்தியா இந்த துறையில் சர்வதேச அளவில் முன்னணியில் உள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி, தூய எரிசக்தி, கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு போன்ற பணிகளின் முதுகெலும்பாக எஃகு திகழ்கிறது என்று திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<<

மாநிலங்களின் கூட்டுறவுத்துறை அமைச்சர்கள் பங்கேற்ற மாநாடு, மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

நாடு முழுவதும் இரண்டு லட்சம் பன்னோக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை எற்படுத்துவது குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கூட்டுறவுத்துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>>>>><<<<<<<<<<

கப்பல் போக்குவரத்துத்துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் கப்பல் போக்குவரத்து தொடர்பான ஆசியான் -இந்தியா பேச்சுக்களில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

துறைமுக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த துறையில் தனியார் பங்களிப்புக்கு ஊக்கம் அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>>>><<<<<<<<<<

அரசின் திட்டங்களை மக்களிடையே கொண்டு சேர்ப்பதில் தொழில் நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பொதுநிர்வாகம் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், டிஜிட்டல் தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு ஊக்கம் அளித்து வருவதாக கூறினார்.

இதன் காரணமாக, அரசின் சேவைகள் உடனுக்குடன் மக்களை சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஆயுஷ்மான் பாரத் மற்றும் பிரதமரின் வீட்டுவசதித் திட்டங்களை செயல்படுத்துவதில் டிஜிட்டல் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>>>>>><<<<<<<<<<

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் செயல்படாததன் காரணமாக, காவல் நிலைய மரணங்கள் ஏற்படுவதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

***<u>Sound Byte - எல். முருகன் - (1) 42 Sec.)</u>***

திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் கூட்டணிக்காக தமிழக மக்களின் நலனில் அக்கறையின்றி செயல்படுவதாகவும் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டினார்.

***<u>Sound Byte - எல். முருகன் - (2) 42 Sec.)</u>***

**>>>>>>>>><<<<<<<<<<**

திமுக கூட்டணியில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை என்று மாநில அமைச்சர் திரு கே என் நேரு கூறியுள்ளார்.

திருவாரூர் காட்டூர் பகுதியில் திமுக தேர்தல் முகவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றிபெறும் என்று திரு கே என் நேரு நம்பிக்கை தெரிவித்தார்.

**>>>>>>>>><<<<<<<<<<**

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து அதிகாரிகளிடம் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

தமிழகத்தில் அமைதி நிலவுவதன் காரணமாக தொழில் வளர்ச்சி அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அனைத்து தரப்பு மக்களும் அமைதியாக வாழும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் முதலமைச்சர் இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

**>>>>>>>>><<<<<<<<<<**

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 24-க்கும் மேற்பட்ட காவல் நிலைய மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன்காரணமாக தமிழக காவல்துறை முதல்வரின் கட்டுப்பாட்டில் இல்லையா என்ற கேள்வி எழுந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த அஜித்குமார் காவல் நிலையத்தில் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக ஒன்பது கேள்விகளையும் திரு நயினார் நாகேந்திரன் எழுப்பியுள்ளார்.

**>>>>>>>>><<<<<<<<<**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல் நிலையத்தில் இளைஞர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திரு தொல் திருமாவளவன் கூறியுள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுபோன்ற சம்பவங்களை தடுப்பதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளை காவல்துறையினருக்கு மாநில அரசு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**>>>>>>>>><<<<<<<<<**

விவசாயிகள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கிருஷ்ணகிரியில் “மா” விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்க வலியுறுத்தி, தேமுதிக சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

விவசாயிகளுக்கு உரிய கொள்முதல் விலையும், பாதிப்புக்கு ஏற்ப நிவாரண உதவிகளையும் திமுக அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குறை கூறினார்.

**>>>>>>>>><<<<<<<<<**

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக, ஒகேனக்கலில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இன்று மாலை நிலவரப்படி தண்ணீர் வரத்து வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte - தருமபுரி தண்டபாணி – 40 Sec.)***

>>>>>>>>><<<<<<<<<<

வேலூர் மாவட்டம் மகிமண்டலம் வனப்பகுதியில் சிறுத்தை நடமாட்டம் தென்பட்டதையடுத்து, அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வனத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த சிறுத்தையின் நடமாட்டத்தை கண்காணிக்கும் பணியில் வனத்துறை ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte - மோகன் - 46 Sec.)***

>>>>>>>>><<<<<<<<<<

*மாவட்டச் செய்திகள்*

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே நீர்நிலைகளில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல் திட்டத்தை மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் இன்று தொடங்கிவைத்தார்.

>>>>>>>>><<<<<<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பழங்குடியினருக்கான மின்னணு குடும்ப அட்டைகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

>>>>>>>>><<<<<<<<<<

அரியலூர் மாவட்டத்தில் ரத்ததானத்தின் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>>>>><<<<<<<<<<

சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் திருமதி பிரியா தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>>>>><<<<<<<<<<

நெல்லையப்பர் காந்தி மதியம்மன் திருக்கோவில் தேர் திருவிழா வரும் எட்டாம் தேதி நடைபெறவுள்ளதையொட்டி, அன்றைய தினம் திருநெல்வேலி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை

அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் 19-ஆம் தேதி வேலை நாளாக இருக்கும் என்று ஆட்சியர் திரு சுகுமார் கூறியுள்ளார்.

**>>>>>>>>><<<<<<<<<<**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee – Taneesha Kotecha** இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

**Tashkent** -ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Divyanshi Bhowmick** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>>>>><<<<<<<<<<**

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி **Northampton-**ல் தற்போது நடைபெற்று வருகிறது.

இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து, பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 41 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 221 ரன் எடுத்துள்ளது.

**>>>>>>>>>end<<<<<<<<**